

මීගමුව මහ නගර සභාවේ 40 වැනි සංවත්සරයේ දී
ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා විසින්
පවත්වන ලද කථාව 1989.12.23 වැනි දින

நீர்கொழும்பு மாநகரசபையின் 40 ஆவது
ஆண்டு நிறைவு விழாவின் போது அதிமேதகு
சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள்
ஆற்றிய உரை - 1989.12.23

Speech made by
His Excellency R. Premadasa, the President,
at the 40th Anniversary Celebrations of the
Negombo Municipality — 23.12.1989

BKT0190
26/08/2023
ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

මීගමුව මහ නගර සභාවේ 40 වැනි සංවත්සරයේ දී
ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා විසින්
පවත්වන ලද කථාව 1989.12.23 වැනි දින

நீர்கொழும்பு மாநகரசபையின் 40 ஆவது
ஆண்டு நிறைவு விழாவின் போது அதிமேதகு
சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள்
ஆற்றிய உரை - 1989.12.23

Speech made by
His Excellency R. Premadasa, the President,
at the 40th Anniversary Celebrations of the
Negombo Municipality — 23.12.1989

# මීගමුව මහ නගර සභාවේ 40 වැනි සංවත්සරයේ දී ජනාධිපති ශ්‍රීමත් ආර්. ප්‍රේමදාස මැතිතුමා විසින් පවත්වන ලද කථාව
## 1989.12.23 වැනි දින

මීගමුව මහ නගර සභාවේ 40 වැනි ජයන්තියට යි අපි හැමෝම මේ සහභාගීවෙලා ඉන්නෙ. අපි කවුරුත් මේ ජයන්තියට බොහොම අර්ථවත් අන්දමින් සහභාගී වුණා කියලා සතුටු වෙන්න පුළුවන්. හුහුආටෝපයකින් යුත් උත්සවයක් හැටියට නොව අර්ථවත් ඵලදායක පොදුජන සුබසෙතක් ඉටු කෙරෙන අවස්ථාවක් හැටියට මේ හතළිස් වැනි ජයන්තිය නමුන්නාන්සේලාගේ නගරාධිපතිතුමත්, නගර සභාවත් යොදාගෙන තියෙනව. නමුන්නාන්සේලාගේ නගරාධිපතිතුමා නමුන්නාන්සේලාගේ මේ නගරයේ කටයුතු ගැන බොහොම බුද්ධිමත්ව ක්‍රියාකරන නායකයෙක්. එතුමාගේ පියා පළමුවෙනි නගර සභාවේ මන්ත්‍රීවරයෙකුව සිටියා. පියාණන්වහන්සේගෙන් ලැබුණු ආභාසය එතුමාට හුඟාක් ප්‍රයෝජනවත් වෙන්න ඇති. හතළිස් අවුරුද්දක් සම්පූර්ණවෙන මේ අවස්ථාවේ දී නගරාධිපති අධීතිඥ සරත්චන්ද්‍ර ගුණරත්න මහතා තමන්ගේ නාගරික මන්ත්‍රීවරුන් සමග, මේ ප්‍රදේශයේ මැති ඇමතිවරුන් සමග, මේ ප්‍රදේශයේ නොයෙකුත් සමිති සමාගම් සමග, අර්ථවත් පොදු ජනතාවට ප්‍රයෝජනවත් වැඩපිළිවෙලකින් මේ අවස්ථාව අනුස්මරණය කරන්න කල්පනා කලා.

එතුමා මේ සඳහා සියළුම ආගමික පූජක පූජ්‍ය උතුමන්ලාගෙන් උපදෙස් ලබාගෙන, හැමදෙනාගේම සහයෝගය ලබා ගත්තා. මේ මුළු ප්‍රදේශයේ ම හැම ජන කොටසක්ම එකට එකතු කරන වැඩපිළිවෙලක්, එකට සම්බන්ධ කරන වැඩපිළිවෙලක් ක්‍රියාත්මක වුණා. හැම ක්ෂේත්‍රයකම, අධ්‍යාපන, සංස්කෘතික, ආර්ථික, කෘෂිකාර්මික යන හැම අංශයකින්ම පාසැල්වලින් පටන් අරගෙන නොයෙක් වෘත්තීය අංශවලට පවා විහිදී යන සහභාගීත්වයක් මේ ජයන්තිය නිමිති කරගෙන මීගමුවේ මහ නගර සභාව විධිවිධාන සලස්වන්නට යෙදුණා. ඒ ලොකු ආදර්ශයක්. යම් අවස්ථාවකට අපි සහභාගී වුණාම අපට ඒ අවස්ථාවට පැමිණීමට පෙර පැවැති දැනුමට වඩා දැනුමක් ඒ අවස්ථාවට සහභාගී වුණු අයට ලබාගන්න අවකාශයක් සැලසෙන්න ඕනෑ.

ඒ අවස්ථාවට සහභාගීවීමට පෙර තිබූ ආස්වාදයට වඩා ආස්වාදයක් ලබාගැනීමට අපට පුළුවන්කමක් තිබෙනවා. ඒ අවස්ථාවට සහභාගීවන අවස්ථාවේ තිබුණට වඩා හිතේ සමාදානයක්, සහනයක් ඇතිවෙන්නට ඕනෑ. ඒ අවස්ථාවට සහභාගී වෙන්න පැමිණීමට පෙර තිබුණට වඩා වැඩි නිස්කලංක භාවයක්, සමගියක් සහෝදරත්වයක්, සතුටක් ඒ අවස්ථාවෙන් පිටවෙලා යනවිට ඇති වෙන්න ඕනෑ. හැම අතින්ම තිබුණට වඩා මිනිසාට ප්‍රයෝජනවත්වන, මිනිසා වඩාත් මනුෂ්‍යත්වයට යොමු කරන හැඟීමක් ඒ අවස්ථාවෙන් පිටවෙලා යනකොට ඒ සහභාගීවුන අයට ඇතිවෙන්න ඕනෑ. ඒ තත්ත්වය අපි සියළුදෙනාටම අද ඇති වුණා. මෙහාට ඇවිල්ල මේ ආදර්ශමත් වැඩපිළිවෙලට සහභාගී වෙනකොට අපේ හැඟීම් හුඟාක් සමනයකට පත් වුණා. රට ගැන තිබෙන අපේ හැඟීම් වඩාත් ප්‍රබල වුණා. ජාති වශයෙන්, ආගම් වශයෙන්, කුල ගෝත්‍ර වශයෙන් අප තුළ තිබුණ වෙනස්කම් හුඟාක් අඩු වුණා. හැම ක්ෂේත්‍රයක්ම අගය කරන්නට අපට අවස්ථාවක් ලැබුණා.

යම් අවස්ථාවකට එනවිට යම් පුද්ගලයෙක් තුළ තිබෙන ගුණාත්මකභාවයට වඩා ගුණාත්මක භාවයක් ඒ අවසාන වී පිටවෙලා යනවිට ඇති වෙන්න ඕනෑ. එසේ අවසානවී යනවිට තමන්ට හිත හිනා යන්ට පාඩමක් ඇති වෙන්න ඕනෑ. ගෙදර ගිහිල්ලා හිතන්නට අවස්ථාවක් තිබෙන්නට ඕනෙ. ඒ පිළිබඳව තමන්ගේ දරු මල්ලන් සමග කථා කිරීමට හැකි තත්ත්වයක් උදාවෙන්න ඕනෑ. මම යම් අවස්ථාවකට සහභාගී වුණා. මං දැනගෙන හිටියට වඩා යමක් මා දැන් ඉගෙනගෙන තියෙනවා. මං හැදී වැඩී හිටියට වඩා හැදිච්ච කමක් මගේ හිතේ ඇති වුණා. මගේ හිතේ තිබ්බ්ච මාද, ක්‍රෝධ, වෛර, හුඟක් අඩු වුණා අද ඒ අවස්ථාවට ගියාම එතන කෙරුණු කථාවලින්. එතන ඇතිවුණ සිද්ධිවලින්. ඒ ආදර්ශ වලින් මං වඩාත් හොඳ මනුෂ්‍යයෙක් බවට පත් වුණා. අන්න ඒ වගේ හැඟීමක් යමකු තුළ ඇති වෙන්න පුළුවන් වෙන විදියේ වාතාවරණයක් මේ වගේ අවස්ථාවල දී සැලසෙනවා. මේ පැය කීපය අප කාටත් ඉතා ප්‍රයෝජනවත් පැය කීපයක් බවට මා සැලකුවේ අන්න ඒ නිසා යි. මේ සංවිධාන වලින් මේ වැඩපිළිවලින් මේ හැම එකකම පරමාර්ථයක් තිබෙනවා. අප, අපට වඩා නැති බැරි කවුරුත් නගා සිටවන්න ඕනෑ. අපට වඩා හපන්කම් තිබෙන අයගෙ හපන්කම් අපි අගය කරන්න ඕනෙ. අප කවුරුත් එකට එක් වී අපේ දුක සැප බෙදාහදා ගන්න ඕනෙයි කියන ඒ හැඟීම, ඒ ගුණාත්මක හැඟීම අපේ මුළු ශරීරය පුරා ම විහිදී යන්න ඕනෑ. මේ විදියට තමයි මෙවැනි අවස්ථාවල් අපි සංවිධානය කරන්නෙ. අද මේ ස්ථානයට අති විශාල ජනකායක් රැස්වී සිටින බව පේනව. තමුන්නාන්සේලාගේ නගරාධිපතිතුමාටත්, නගර සභාවටත් මේ වගේ ආදර්ශමත් අවස්ථාවක් අපට ලබා දීම ගැන තමුන්නාන්සේලා හැම දෙනා වෙනුවෙන්ම මා ප්‍රශංසා කරනවා.

මේ පසුගිය දින කීපය තුළම මෙම හතළිස් වැනි ජයන්තිය නිමිතිකොට ගෙන මේ ප්‍රදේශයේ නැති බැරි අහිංසක දුගී දුප්පත් ජනතාවට වගේ ම හැදී වැඩී ගෙන එන තරුණ පරපුරටත් සහනයක්, සහයෝගයක් ලැබෙන ආකාරයෙන් ව්‍යාපෘති ගණනාවක්ම මීගමුව නගර සභාව ආරම්භ කර තිබෙනවා. රටේ සෙසු ජන කොටස් සහ ආයතන මේ පිළිබඳව දැනගත යුතුව තිබෙනවා. ඒ අවස්ථාවල් වාර්තා කොට සටහන් කොට සන්නිවේදන මාධ්‍යයෙන් මුළු රටටම පෙන්වා දෙන්න ඕනෑ බව මම නගරාධිපතිතුමාට කීවේ ඒ නිස යි. මෙවැනි අවස්ථාවක දී කරන්න පුළුවන් අර්ථවත්, ප්‍රයෝජනවත් වැඩපිළිවෙලවල් මොනවා ද කියලා මුළු රටටම කියා දිය යුතුව තිබෙනවා.

පසුගිය අවුරුදු හතළිහ මුළුල්ලේ තමුන්නාන්සේලා ලැබූ ප්‍රගතිය ගැන ආඩම්බරයෙන් කථා කිරීමට පමණක් මේ අවස්ථාව සීමා කළේ නැහැ. තවත් අවුරුදු 40 කට ආදර්ශයක් ගන්න පුළුවන් වැඩපිළිවෙලවල් තමුන්නාන්සේලා මේ 40 වැනි ජයන්තිය නිමිතිකරගෙන ක්‍රියාත්මක කළා. මේ මීගමුව නගර සභාවේ පාලන තන්ත්‍රයේ ආරම්භ කළ යුගය එනම්, අපි වහල්ව සිටි යුගයේ ඒ ආරම්භ කළ මීගමු පුත්‍රයින් ඒ කවුරුත් ගැන කථා කළා. අද ජීවතුන් අතර නැතත් ඔවුන්ගේ ශ්‍රී නාමයන්ට නියම උපහාරය පිළිගත යුතු යි. ඒ උරුමය භාරගත්ත වර්තමානයේ තමුන්නාන්සේලා ඒ උදවිය අමතක නොවන ආකාරයකට ඉදිරි වැඩපිළිවෙලවල් සකස් කළ යුතු යි.

මීගමු ඉතිහාසය තමුන්නාන්සේලා දන්නවා. මීගමුවේ වැඩිදියුණුව තමුන්නාන්සේලා දන්නවා. මීගමුව වඩාත් දියුණු කරන්න අවශ්‍ය දේත් තමුන්නාන්සේලා දන්නවා. අපි කවුරුත් ඒ වැඩ පිළිවෙලවල් වලට සම්බන්ධ වෙන්න ඕනෑ. සහභාගී වෙන්න ඕනෑ. ලංකාවේ හැම ප්‍රදේශයක්ම හැම නගරයක් ම හැමදෙනාටම අයිතියි. යම් යම් කාලවල අපි අපේ රටේ ඒ ඒ ප්‍රදේශවල ආත්මයෙන් ආත්මයට අපි ඉපදිලා ඉන්නත් ඇති. මතුවෙදිත් උපදින්නත් පුළුවන්. ඒ නිසා අපි කොහේ ජීවත් උනත්, හැම තැනම අපේ ය කියන හැඟීම අපි ඇතිකර ගන්න ඕනෑ. අපි වෙන පළාතක ජීවත් වුණත්, මේ නොයෙක් පළාත්වලින් අප පෝෂණය වන බව අපි කවුරුත් දන්නවා. අපේ පණ තළ රැකෙන්නේ ඉපදිල හැදිල වැඩිල ජීවත්වන පළාතේ පමණක් නිෂ්පාදනය වන වැඩෙන දේවල්වලින් පමණක් නොවෙයි. අපි කොහේ ජීවත් වුණත් මුළු ලංකාවේ හැම ප්‍රදේශවලින් ම නිෂ්පාදනය කෙරෙන නොයෙකුත් ආහාර ද්‍රව්‍ය, රෙදිපිළි, බඩු භාණ්ඩ අපේ ජීවිකාව ගෙනයන්නට අවශ්‍ය යි. අපේ රටේ විතරක් නොවෙයි, ලෝකයේ නොයෙක් රටවල් වලිනුත් අපේ පෝෂණයට උදව් ආධාර ලැබෙනවා. පටුකරගන්න නරකයි. සීමාකරගන්න නරකයි. අපි අසීමිත හැඟීම් ඇතිකරගන්න ඕනෑ. දැන් මේ වගේ කාලයක මේ වගේ ඓතිහාසික

අවස්ථාවක අපට මතක් කරගන්න පුළුවන් ආදර්ශයක් තිබෙනවා. හෙට අනිද්දට අපි නත්තල් බුක්ති විඳිනව. නත්තල් සමයේ අපි උගතයුතු පාඩම තමුන්නාන්සේලා දන්නවා. මහා කරුණාවෙන්, මහා අනුකම්පාවෙන් හැම දේශයකට ම හැම ජන කොටසකට ම විසිරී ඉතිරී පැතිරී යන දයානුකම්පාවෙන් පිරි ආදර්ශයක් අපට සිහිපත් වෙනවා. නත්තල් සමය අපි ඒ සඳහා යොදා ගන්නවා. ජේසුස් ක්‍රිස්තුස් වහන්සේගේ ඉගැන්වීම නැවත නැවතත් හැම මොහොතකම වාගේ මේ දිනවල අපේ සිත්සතන් තුළට ඇතුල් වෙනවා.

අපට තනියම ජීවත් වෙන්න බැහැ. අපේ එක් එක්කෙනාගේ ජීවිත මුළු ලෝකයටම හවුල් වෙනව, සහාය වෙනව, අපිව පෝෂණය කරනව. කියන පණිවුඩය එහි ගැබ්වී තිබෙනවා. ඒ වාගේම අපෙනුත් මුළු ලෝකයට ම, ලෝක සත්වයාටම ඉටු විය යුතු යුතුකම් තිබෙනවා. ඒ ඔක්කෝම එකතුවීමෙන් තමයි අපට ඒ පෝෂණය ලැබෙන්නේ. එහෙම සිහිකරන අවස්ථාවේ මෙම ඓතිහාසික පූජණිය සමයේ තමුන්නාන්සේලා මේ 40 වැනි ජයන්තිය පැවැත්වීම ආදර්ශමත් ක්‍රියාවක්. ඒ ගැන නැවතත් මගේ ප්‍රශංසාව තමුන්නාන්සේලාට හිමි කරන්න කැමතියි.

මේ පළාත් පාලන ක්‍රමය ඇති වුනේ අපි යටත් විජිතයක් වී සිටි කාලයේ දී යි. බ්‍රිතාන්‍යයන්ගේ සමයේ දී නොයෙක් ආකාරයේ ලෝකල් බෝඩ් කියල එහෙමත් නැත්නම් අර්බන් දිස්ත්‍රික් කවුන්සිල් කියල ඔය විදියේ විවිධ ආකාරවලින් මේ පළාත් පාලන ක්‍රමය ඇති වුණා. පසුව ජන්දයෙන් තෝරන මහ නගර සභා, නගර සභා, සුළු නගර සභා, ගම් සභා ආදිය ඇති වුණා. අපේ ඉතිහාසයේ විමධ්‍යගත පාලනයට ඉතා වැදගත් තැනක් හිමිවෙනවා. රාජාණ්ඩු කාලවල දී පවා රජතුමා රටේ ගම් සභාවල් ඇති කළා, ගමේ ජනතාවගේ සහභාගීත්වයෙන්. ගමේ ඕනෑ එපාකම් සොයා බලා ඉටු කරන්න. ගමට අවශ්‍ය දේ ලබාදීමේ දී රජතුමා ඒ පිළිබඳව විමසුවේ ගම් සභාවෙන්. ඒ පණ්ඩුකාභය රජ්ජුරුවන්ගේ කාලයේ දී යි. ඒ නිසා බ්‍රිතාන්‍යයන් අපට එක්තරා විදියක පළාත් පාලන ක්‍රමයක් හැදින්වූ විට අපට එය වඩා ශක්තිමත්ව ව්‍යාප්ත කරන්න පුළුවන් වුණා, අපේ ඓතිහාසික පළපුරුද්ද. විමධ්‍යගත පාලන තන්ත්‍රය විහිදී ගියේ අරුවත් විදියට. එදා අපි ගම නම් කළේ, වෙන් කළේ භූගෝලීය සීමාවන් අනුව යි. එක් එක් ගමට ආවේනික වූ චාරිත්‍රයක් තිබෙනව. ඒ ගමේ ජීවත්වන ජන කොටසකට විශේෂ වූ හැකියාවකුත් තිබෙනවා. ජනතාව එක ජනතාවක් වුණා වාගේ ම ඒ ඒ ජන කොටස්වලට ආවේනික වූ ගති පැවතුම්, ගුණාගුණ, චාරිත්‍ර වාරිත්‍ර, භූගෝලීය හේතු, ඒ ගම්වලටම ආවේනික ඒ සීමාවන් ගත්ත ගම් සභාවලට ඇති වුණා.

අපේ පෞරාණික ගම හැදුනේ, ගම් 20,000 පමණ වූ ලංකාවේ ගම් දනව් ඇතිවුනේ නිකම් සිතියමක් අරගෙන ඒ සිතියම හරහා සීමාවන් ඇඳීමෙන් නොවේ. මිණින්දෝරුවන් ඇන්ද සීමාවන් උඩ

නොවෙයි. ඒ ගම් සහා ක්‍රමය ඇති වුනේ. එදා ඒ ගම් සහා ක්‍රමය ඇති වුනේ ඒ ඒ ප්‍රදේශයේ භූගෝලය අනුවයි. ජන කොටස් අතර ඒ ඒ කොටස්වලට ආවේණික වුණු යම්කිසි විශේෂත්වයක් තිබුණ. විවිධත්වයක් තිබුණ. ඒවා භේදයක් ලෙස හරවාගත්තේ නැහැ. ඒවා විවිධත්වයෙන් අගය කළා. විචිත්‍රවත් කර ගත්තා. හරියට විවිධ වර්ණවත් මල්වලින් ශෝභාමත් කළ පොකුරක් වගේ. එහි ලක්ෂණ භුක්ති වින්ද. එහෙත් අද එම විවිධත්වය විනාශය සඳහා පාවිච්චි කරනවා. භාෂා විවිධත්වය, ජාතිමය, චාරිත්‍රමය, ආගමිකමය පළාත්බදමය, පාරිසරිකමය යන විවිධත්වයන් උඩ අපි ඇණකොටා ගන්නවා. අපේ එකතුවීමේ ස්වභාවය අලංකාරවත් කරගත්, එකම පාටක මල් පොකුරක්, එකම සුවඳ ඇති මල් පොකුරක්, නොව විවිධ විචිත්‍ර වර්ණවත් මල් පොකුරක්. විවිධ සුගන්දය ආඝ්‍රණය කරන්න පුළුවන් මල් පොකුරක්, බවට පත් වුණා. විවිධත්වය තුළ එක්සත් භාවයක් ඇති කරන්න. ඔය ගම් හැදුනෙ එහෙමයි. ඔය ගම් 20,000 ක් 25,000 ක් විතර තියෙනව. එකින් එක අරගෙන බැලුවොත් ඇයි මේ ගම අනිත් ගම්වලින් වෙනස්ව පෙණුනෙ. මොකක් හරි හේතුවක් තිබෙනව. වෙන මොකක් හරි වෙනසක් නැතිනම් පයේ හරි වෙනසක් තිබෙනව. එහෙම නැත්නම් හැදෙන වැඩෙන ගස් කොළන්වල වෙනසක් වත් තිබෙනව. එහෙම නැත්නම් ජීවත්වන උදවියගෙ චාරිත්‍ර චාරිත්‍රවල බින්දු මාත්‍රයකින් වත් වෙනසක් තිබෙනව. හැබැයි අඳින පළඳින ක්‍රමයෙන් පොඩි වෙනසක් හරි තිබෙනව. කථා කරන ස්වරූපයෙන්, ස්වභාවයෙන් වෙනසක් තිබෙනව. ඇතැම්විට කන බොන කෑමවල පවා නොයෙකුත් රසවල වෙනසක් තිබෙනව. ලුණු ඇඹුල් දැමීමේ පවා විවිධත්වයක් තිබෙනව. සමහර තැනක මිරිස් වැඩියෙන් කෑව, සමහර තැනක අඩුවෙන් කෑව, සමහර තැනක වෙනත් වෙනත් ආහාර පාන පාවිච්චි කළා. එකම කෑම වර්ගය විවිධ ලෙස ඉව්ව, පිහෙව්ව, එකම මාළු වර්ගයක් සමහර විට එක විදියකට ඉව්ව, වෙනතැනක තවත් විදියකට පිළියෙළ කළා. එහි විවිධත්වයක් වෙනසක් තිබෙනව.

මේ අනුව තමයි, අර පෞරාණික ගම් හැදෙන්නෙ. එහෙම නැතුව නිකං සිතියමේ ඉරක් ඇඳල, හදන ගම්වලින් කවදාවත් අර විචිත්‍රත්වය ඇතිකරගන්න බැහැ. එහෙම නම් විනාශකාරීත්වය ඇති වෙනව. මිනිසුන් අඩු වෙනව. නිකං බෙදෙනව. පසු කාලයක මේ ඉරිඇඳිල්ල කොයි තරමට ගියාද කිව්වොත් දේශපාලන වාසි සහ අවාසි උඩ කල්පනා කරල එක ආණ්ඩුවක්, එක නගරයක, නාගරික ඡන්ද කොට්ඨාශ බෙදන්න පටන් ගත්තා. ඉතින් එදා ඒ ආණ්ඩු පක්ෂයේ උදවිය එකතුවෙලා නාගරික ඡන්දයෙන් මේ නගර සභා අල්ලගන්න ඕනෙයි කියල මේ මිනින්දෝරුවො එහෙම ගෙන්නගෙන, සිතියම මේසෙ එළාගෙන එක් එක්කෙනා කියන විදියට ඉරි ඇඳගෙන ගියා. එක්කෙනෙක් කිව්ව "මට දිනන්න පුළුවන් මේ වත්තෙන්. මේ පැත්තේ මේ ඉර මෙහෙම ගියොත් මට මේ කට්ටියගෙන් ඡන්දෙ වැඩියෙන්

ගත්ත පුළුවන්'' කියල. වෙන කිසිම හේතුවක් උඩ නොවෙයි. ඔහොම ඉරවල් ඇඳල ඇඳල ඔක්කොම ඉවර වෙලා ඡන්ද ලැයිස්තුත් හරිගස්සනවා. ඡන්දෙ පැවැත්තුවා. ඡන්දෙ පවත්වන්න ගියාම බලාගෙන යන කොට ඉරි ඇඳිල තියෙනව ගෙවල් මැදින්. රැට කෙනෙක් තීදා ගත්තාම උඩ කොටස එක් කොට්ඨාශයක, යට කොටස තවත් කොට්ඨාශයක. ගෙවල් දොරවල් ගැන කල්පනා නොකර කොට්ඨාශ බෙදා ගන්නව. ආසන 47 ක් තිබුණ මේ නගර සභාවෙ. 40 ක් ම ආණ්ඩු පක්ෂයට විරුද්ධ පැත්තට ගියා. එහෙම බැ. රටේ ගම්මාන පිළිබඳ හඳුනාගැනීමක් ඇති කරන්න ඕන. අපේ ගම්මාන ඇති වුණ ක්‍රමයක් තිබෙනව.

**අද අපේ පළාත් පාලන ක්‍රමය පිළිබඳව, විශේෂ සැලකිල්ලක් දැක්විය යුතු අවස්ථාවකට අපි එළඹිලා තිබෙනව. අද ජාතික පාර්ලිමේන්තුව තිබෙනව. අද පළාත් සභා ක්‍රමය තිබෙනව. ඒ පළාත් සභා ක්‍රමය තුළ මහ නගර සභා ප්‍රාදේශීය සභා ක්‍රමය තිබෙනව. කල්පනා කරන්න ඕන, මේ රටේ අද තිබෙන අවශ්‍යතාවයන්. එක අවශ්‍යතාවයක් තමයි අපේ ගම් දනව් හා නගරවලට උචිත වන අන්දමට ජ්වායේ වැඩිදියුණුව ඇති කිරීම. ඒ වැඩි දියුණුව ඇති කරන්න නම් ඒ ප්‍රදේශවල ජනතාවගේ හැඟීම් අනුව ඒ වැඩිදියුණුව සකස් කරන්න ඕන. ඒක එක අවශ්‍යතාවයක්.**

**දෙවැනි අවශ්‍යතාවය මොකක්ද?** අද ශ්‍රී ලංකාවේ ජනගහණය 160 ලක්ෂයක් නම් අද අනූ ලක්ෂයක් විතර ඡන්ද දායකයෝ. දේශපාලන උරුමය බුක්ති විඳින අය. රටේ පාලන තන්ත්‍රය නම තියම කරන ජනතාව. අද කල්පනා කරල බලන්න, රටේ ඒ දේශපාලන උරුමයේ වගකීම ලැබිල තිබෙන්නෙ කී දෙනාට ද? ජනාධිපති ඉන්නව, අගමැති ඉන්නව, ඇමති මණ්ඩලයක් ඉන්නව, පාර්ලිමේන්තුවක් තියෙනව, පළාත් සභා, නගර සභා, මහ නගර සභා, ප්‍රාදේශීය සභා තිබෙනව. බලතල, තීලතල වගකීම ලැබෙන්නේ කීදෙනෙකුට ද? බලනකොට ඉතාමත් සීමාසහිත පිරිසකට. 5,000 ක් ද, 10,000 ක් ද ඕන නම් කියමු, 50,000 ක් කියල. එහෙම නැත්නම් කියමු ලක්ෂයක් කියල. එච්චර නැහැ. මම අහනව 160 ලක්ෂයෙන් ඡන්ද බලය හිමි අනූ ලක්ෂයක් ජීවත්වන රටක දේශපාලන බලතල උරගා බලන, බුක්ති විඳින, ජන කොටස ප්‍රමාණවත් ද කියල මම අහනව. විශේෂයෙන් දැන උගත් තරුණ පරපුරක්, උද්‍යෝගිමත් තරුණ පරපුරක් අපට ඕනැතරම් සිටින යුගයක දී ඔවුන්ට අත්හදා බැලීමට, පලපුරුද්දක් ඇති කර ගැනීමට, ඔවුන්ගේ වයසේ දී ඔවුන් ජීවත්වන ප්‍රදේශය තුළ දේශපාලන බලතල වල හිමිකරුවන් බවට පත් කරන්න අද තිබෙන අවස්ථාව ප්‍රමාණවත් ද කියල අපි විශේෂයෙන් ම කල්පනා කරන්න ඕන.

නොයෙක් අය තරුණ අසහනය ගැන කථා කරනව. ඒ අසහනයට හේතුව ආර්ථික ප්‍රශ්න පමණක් ය කියල කියනව. රුකියා

ප්‍රශ්න පමණක් ය කියල කියනව. නැහැ. ආර්ථික අවශ්‍යතාවයන් සමගම මේ රටේ උරුමය ඇති ජන කොටසක් හැටියට අනාගත වගකීමක් බාරගන්න ඉන්න, මේ රටේ පාලකයින් හැටියට සර්වජන ඡන්දබලය තුළින් තරුණ පිරිසට ඔවුන් ජීවත්වන ප්‍රදේශවල පාලන තන්ත්‍රයේ බලතල ඔවුන්ට අත්වීම පිණිස වැඩ පිළිවෙලවල්, සංවිධාන අප ඇති කරන්න ඕන. මේවා ගැන බොහොම දුරදිගින් කල්පනා කළා. භාරතයේ මහත්මා ගාන්ධිතුමා බ්‍රිතාන්‍යයට විරුද්ධව නිදහස් සටන මෙහෙයවන කාලෙ එතුමා නිරතුරුවම කල්පනා කලේ නිදහස දිනාගන්න පමණක් නොවෙයි, ඒ නිදහස අර්ථවත් කරන්න නම්, ඒ නිදහසෙන් ඇතිවන දේශපාලන වැඩ පිළිවෙල සාර්ථක වන්න නම්, රටේ වැඩිදෙනෙක් රටේ ඉරණම පිළිබඳ වගකීම් දරන තත්ත්වයකට පත්වන ආකාරයේ අවකාශ සලසන්නට ඕනෑ ය කියල එතුමා නිදහස් සටන ගෙන යන කාලයේ දී ම කල්පනා කළා. ඒ ගැන සම්මන්ත්‍රණ පැවැත්තුවා. සාකච්ඡාවල් ඇති කළා. ඒවා ගැන කථා කළා පමණක් නොවෙයි, වැදගත් ලිපි ලේඛණ පවා පිළියෙල කළා. එතුමා කිව්වා ඉන්දියාව සාර්ථක ජනසම්මතවාදී පාලනයකට පත්කරන්න නම්, ඉන්දියාවේ විවිධ ජාතීන්, විවිධ ආගම්කයින්, විවිධ ප්‍රදේශ, විවිධ චාරිත්‍ර වාරිත්‍ර, පලාත්වල තිබෙන විවිධ භූගෝලීය වෙනස්කම් අපි තේරුම් ගත යුතුයි කියල.

අද ඉන්න මේ සුදු පාලකයින් පත්නල, සීමාසහිත පිරිසකට මේ රටේ බලතල ලබාදීල ලබන නිදහස තුළින් කවදාවත් සහනයක් ලබන්න බැහැ. ප්‍රශ්න අවුල් වේවි, වැඩිවේවි. ගමේ මට්ටමට බලය හා වගකීම බෙදාහරින්න කියලා මහත්මා ගාන්ධිතුමා කිව්වා.

එතුමා වැඩිදුරටත් ප්‍රකාශ කළා, "මම යෝජනා කරන්නෙ ඉන්දියාව නිදහස් උනාට පසුව ඇමති මණ්ඩල්යක්, මන්ත්‍රී මණ්ඩලයක්, ඒ ගම්මානවල ඇති වෙන්න ඕනෙ. ඒ ඇතිවන ජන රජ ඔක්කොම එකට සම්බන්ධීකරණය කරල, පොදු රාජ්‍ය මණ්ඩලයක් ඇතිකරන්න ඕන. මට උවමනා කරන්නෙ, ඉන්දියාවෙ පාලන තන්ත්‍රය ගෙන යන්නට ග්‍රාමීය ජන රජවලින් යුක්ත පොදු රාජ්‍ය මණ්ඩලයක්."

කල්පනා කරල බලන්න, අද ඇතිවෙලා තිබෙන වාද භේදවලට, අවුල් වියවුල්වලට ජන වාර්ගික වශයෙන්, ආගමික වශයෙන්, කුල ගෝත්‍ර වශයෙන්, ප්‍රදේශ වශයෙන්, ඇතිවෙලා තිබෙන ප්‍රශ්නවලට කොයිතරම් පිටුවහලක් එවැනි ක්‍රමයකින් ලැබෙන්න තිබුණද? අපි ගැන අපි කල්පනා කරන්න ඕන. ශ්‍රී ලංකාවේ අපි ඒ පාඩම් ඉගෙනගන්න ඕන. මම මේව අද ඊයෙ කියපුව නොවෙයි, මම විරුද්ධ පක්ෂයේ මන්ත්‍රීවරයෙකු හැටියට, ආණ්ඩුවෙ ඇමතිවරයෙක් හැටියට, අගමැති කෙනෙක් හැටියට මම මේ අදහස ඉදිරිපත් කරල තිබෙනව.

අපි උත්සාහ කෙරුවෙ කාගෙත් කැමැත්ත අරගෙන, කාගේත් සහභාගීත්වය ඇතිව, එවැනි පාලන තන්ත්‍රයක් මේ රටේ ඇති කරන්න. බලතල විමධ්‍යගත වෙනවා පමණක් නොවෙයි, අපට ප්‍රදේශ

ඇතිකරන්න පුළුවන්, ග්‍රාමීය වශයෙන් නඩත්තු කරන්න පුළුවන් සම්පත් ඒ ඒ ප්‍රදේශවල තිබෙනව. ඒ ඒ ප්‍රදේශවල තිබෙනව ස්වභාවික සම්පත්. ඒ ප්‍රදේශවල ජන කොටස්වල චාරිත්‍ර වාරිත්‍ර පවතිනව. විවිධත්වය තිබෙනව. ඒවත් ආරක්‍ෂා කරමින් ඒ ප්‍රදේශවල පාලන තන්ත්‍රවල ඒ ප්‍රමාණය අනුව බලතල ඇතිව සහභාගීවන්න පුළුවන් පාලන තන්ත්‍රයක් ඇතිකරන්න ඕන අපි. විශේෂයෙන්ම සර්ව පාක්‍ෂික සමුළුවේ දී ඔය බලය විමධ්‍යගත කිරීම වැනි කරුණුවලට අපි පක්‍ෂ භේදයෙන් තොරව එකට එකතුවෙලා විසඳුම් හොයන්න ඕනෑ ය කියල මම කිව්වෙ. **අදත් අපට මුහුණ පාන්න වෙලා තිබෙන වාර්ගික ප්‍රශ්නවලට හේතුව ආර්ථික අපහසුව පමණක් නොවෙ යි, දේශපාලනමය අයිතිය, උරුමය, නැතිවුනාම එතන අසහනය ඇතිවෙනව. ඒක ජාති වශයෙන්, ගෝත්‍ර වශයෙන්, ප්‍රදේශ වශයෙන් ඇති වෙන්න පුළුවන්, නමුත් අද ඇතිවෙලා තිබෙනව පන්ති වශයෙන්,** ස්වල්ප පිරිසක් පමණයි දේශපාලන උරුමය හිමිකරගෙන, සතුකරගෙන සීමාසහිත ප්‍රමාණයකට බුක්ති විඳින්නෙ. අපි කොයිතරම් ඉගෙන ගත්තත් දැන උගත්කම් තිබුණත්, ඕනෑ එපාකම් තිබුණත් හැදී වැඩීගෙන එන මේ තරුණ පිරිසට තැනක් ලැබෙන්නෙ නෑ. ඒවා අපෙන් වසා දමන තත්ත්වයට හැම සංවිධානයක් ම සකස් කරගෙන තිබෙනවා. ආර්ථික අසහනයට වඩා දේශපාලනමය අසහනය බොහොම දරුණු වෙන්න පුළුවන්. ඒ අසහනය ප්‍රයෝජනයට අරගෙන නොයෙක් විෂමකාරී බලවේග අපේ තරුණ පිරිස් නොමග යවනවා.

ඒ නිසා මේ පළාත් පාලන ක්‍රමයේ විශේෂ වෙනසක් ඇති කරන්න අපි කල්පනා කරන්න ඕන. මේ වයස 18 - 35 ත් අතර, තරුණ විය උද්‍යෝගිමත් වියක්. හැම දෙයක්ම පූජා කරන්න සූදානම් අවස්ථාවක්. ඒ වයසට ගැලපෙන විදියෙ බලතල දීල ඒ උද්වේගය ප්‍රයෝජනයට ගන්න පුළුවන් අවස්ථා මේ පාලන තන්ත්‍රය තුළ අපි ඇති කරන්න ඕන. අද තරුණ ප්‍රශ්න ගැන විමසන කොමිෂන් සභාව, මේ ගැන කල්පනා කරන්න. මේකට වැඩ පිළිවෙලක් අපි සකස් කරන්න ඕන. එහෙම නැත්නම් 90 ලක්‍ෂයක් සර්ව ජන ඡන්ද බලය බුක්ති විඳින රටක හාර පන්දහක් නැත්නම් දහදාහක් පමණක් දේශපාලන බලතල බුක්ති විඳීම තමුන්නාන්සේලා පිළිගන්නවා ඇති අසහනය තව තවත් වැඩිදියුණු කරන මාර්ගයක් පමණක් බව.

ඊළඟට අපි නිතරම කල්පනා කරන්න ඕන අපට වෙන් වෙන්න තිබෙන, වෙනස්වෙන්න තිබෙන කරුණුවලට වඩා එකතු වෙන්න තිබෙන කරුණු මොනවාද කියල හඳුනාගන්න. යුගයේ අවශ්‍යතාවයක් ඒක. අද අපි නොයෙක් අභියෝගවලට මුහුණ දීල තිබෙනව. මේවට විසඳුම් සොයන්න පුළුවන් ද, මේවා පිළිබඳ වගකීම එක එක්කෙනාට පවරල, එක එක්කෙනාට දොස් කියල, දොස් පවර පවර ආත්ම තෘප්තියක් ලැබුවට ප්‍රශ්නයට විසඳුම් ලැබෙන්නෙ නැහැ. අපි පුළුවන්

තරම්, අපට එකඟ වෙන්න පුළුවන් තරම් ඒව සමග එකතුවෙලා ඒ මගින් රටේ සාමය, සමගිය සංවරය ඇතිකරන්න අපි ක්‍රියා කරන්න ඕන.

ඊළඟට මට පේනව, අද සුබ වාතාවරණයක් කලාපීය වශයෙනුත් මේ දකුණු ආසියාවෙ ඇතිවේගෙන එනව. දකුණු ආසියාවේ කලාපීය රටවල්වල අද නව තැම්මක් ඇතිවේගෙන එනව. ඒ ඒ රටවල්වල ස්වාධීනත්වය රැක ගනිමින්, අපට වැඩ කරන්න පුළුවන්, වාතාවරණයක් ඇතිවෙලා තිබෙනව. අපි ඒ ගැන සතුටුවෙන්න ඕන. ඉන්දියාවේ නව රජය වී. පී. සිං මැතිතුමාගේ නායකත්වයෙන් අද ඒ රටේ ජනතාව තෝරා පත්කරල තිබෙනව. ඒ රජයට සම්බන්ධ හැම කොටසක් ශ්‍රී ලංකාවේ ස්වෛරීත්වය අගයනව, පිළිගන්නව, ශ්‍රී ලංකාව සමග සහයෝගයෙන් වැඩකරන්න ලෑස්තියි. අපට වෙච්ච කරදර හිරිහැර ගැන අවබෝධයක් තිබෙනව. ඉන්දියාවේ ජනසන්නිවේදන මාධ්‍යය ශ්‍රී ලංකාවට බොහොම හිතවත්ව මෑත කාලයේ ක්‍රියා කළා. ප්‍රවෘත්ති පත්‍ර පමණක් නොවෙයි, බුද්ධිමතුන් පවා අද නව රජය පත් උනාට පස්සෙ, මට පේනව, අප දෙරටේ ම විශිෂ්ට සහෝදරත්වයක් සහයෝගයක්, සහජීවනයක් ඇති කරගන්න පුළුවන් තත්ත්වයක් උදාවෙලා තිබෙනවා. මේ නිසා උතුරෙත් නැගෙනහිරත් අද ඇතිවෙලා තිබෙන ප්‍රශ්නවලට විසඳුම් හොයන්නත් අපට පුළුවන්. උතුරෙත් නැගෙනහිරත් සටන්කාමීත්වය කරා ගමන් කළ හැම කොටසක් ම වාගේ අද ජනසම්මතවාදයට පිවිසී ගෙන යනව.

සටන්කාමී කොටස් ගණනාවක්, පසුගිය අවුරුදු දෙක තුළ ජනසම්මතවාදයට ඇතුල් උනා. ඉතිරි වී සිටි කොටසක් වන ඇල්ටීටී ඊ කණ්ඩායමත් දැන් ජනසම්මතවාදී ප්‍රවාහයට ඇතුල් වෙලා. අපෙන් වෙන් වෙන්නෙ එකට ජීවත්වෙන්න බැරි උනාම. අපි උත්සාහ කරන්න ඕන. එකට ජීවත්වෙන්න බැරිවෙන හේතු මොනවාද කියල දැනගන්න. ඒව සාකච්ඡාවෙන් සහෝදරත්වයෙන් අප සමතයකට පත්කර ගන්න ඕන. ඒ උත්සාහය සාර්ථකවේගෙන එනව. මීට කලින් යම් යම් දේවල් කලේ ඇයි? ඒවට පිළිතුරු ලැබෙයි. ඒව කරන්න හේතුවුණ දේවල් මොනවද, ඒ හේතු අපි ඉවත් කරල වැඩ කරමු. අපට එකතුවෙලා වැඩ කරන්න පුළුවන් වෙනව.

මට පේනව සුබ නව යුගයක් උදා වෙන්න යනව. ශ්‍රී ලංකාවෙ හැම ජන කොටසක් අතර ම. ඒ හැම ජනකොටසකගේ ම අයිතිය, උරුමය රැකගනිමින්, අපට සහෝදරත්වයෙන් ජීවත්වෙන්න පුළුවන් යුගයක් උදාවෙනව. ඉන්දියාවෙන් අපට හුඟාක් උපකාර ලැබේවි. ඒ වගේම මේ කලාපයේ පාකිස්ථානයේ, මාලදිවයින, භූතානය, බංගලිදේශය, නේපාලය මේ අපේ කලාපයේ සහෝදර රටවල්. ඒ හැම රටක් අතරම අපට හොඳ මිත්‍රත්වයක් ගොඩනගා ගන්න පුළුවන්. බලන්න, මේ කලාපයේ ජීවත්වෙන ජනගහනය.

මොන තරම් වටිනා වෙළඳපොලක් තිබෙනව ද, දේශපාලන අවබෝධය සහ සහෝදරත්වය ඇති වුනාම, මේ දකුණු ආසියානු කලාපයේ, අපේ රටවල්වල වැඩි ජනගහනය අපේ කලාපයේ රටවල්වල ප්‍රයෝජනයට යොදාගන්න පුළුවන්. සාක් රටවල් කියල කියන්නේ දකුණු ආසියාවේ රටවල් වලට. අපට එකට එකතුවෙලා සහෝදරත්වයෙන් යුතුව අපේ කලාපය ආර්ථික සැලැස්මක් ඇතිකර ගන්න පුළුවන්. ඒ ඒ රටට නිපදවන්න පුළුවන් දෙයට අවකාශ දෙමින් අපේ මේ රටවල්වල වෙළඳපොල දියුණු කළ හැකි යි. එහි ප්‍රයෝජනය ගනිමින්, අපේ රටවල්වල තිබෙන විවිධත්වය ප්‍රයෝජනයට ගනිමින්, අපට පුදුම විදියේ නව නැම්මක්, නව දියුණුවක් මේ දකුණු ආසියා කලාපයේ අපට ඇතිකරන්න පුළුවන්. අපට අද ලෝකයේ අනික් මිත්‍ර රටවල් උදව් කරනව. බටහිර යුරෝපය පමණක් නොවෙයි, ඇමෙරිකාව, ආසියාව, සහ ඕස්ට්‍රේලියාවෙ මහද්වීපවල අය අපත් සමග හැම රටක් ම මිත්‍ර යි.

**නොයෙකුත් ආකාරයට දේශපාලනමය වශයෙන් බෙදී තිබුණු ලෝකය අද එක අරමුණකට යොමුවේගෙන එනව. ජනසම්මතවාදයට යොමුවේගෙන එනව. ප්‍රජාතාන්ත්‍රීය ආර්ථික ක්‍රමයට යොමු වේගෙන එනව. සෝවියට් දේශයේ ජනාධිපති මිහායිල් ගොර්බචොප් මැතිතුමාගේ නායකත්වයෙන් ඇතිවේගෙන එන ප්‍රතිසංවිධානය අනික් රටවල් ආදර්ශයට අරන් තිබෙනව. විනයේ ඇතිවේගෙන එන වෙනස්කම් අපි සියලු දෙනාටම ආදර්ශයක්. ඒ නිසා ඇත්ත වශයෙන් ම මට පේනව, සුබ නව යුගයක් අපේ දකුණු ආසියා කලාපයට පමණක් නෙමෙ යි, මුළු ලෝකයට ම උදාවී ගෙන එන බව.**

ඒ නිසා අභ්‍යන්තරික වශයෙනුත් අපි වෙන් වෙන්න නොවෙයි එක්වන්නට, සියලුදෙනාම අධිෂ්ඨානයෙන් ක්‍රියාකරන්න ඕන. එහෙම කල්පනා කරනකොට, මීගමුව මහ නගර සභාව 40 වන ජයන්තිය නිමිත්තෙන් තමුන්නාන්සේලා ක්‍රියාත්මක කළ ආදර්ශමත් වැඩපිළිවෙල අපි සියලුදෙනාගේම ප්‍රශංසාවට ලක් වෙනව.

තමුන්නාන්සේලාට සුබපතමින් මගේ කතාව මෙයින් සමාප්ත කරනව.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

## நீர்கொழும்பு மாநகரசபையின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது அதிமேதகு சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — 1989.12.23

நீர்கொழும்பு மாநகரசபையின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாட நாங்கள் அனைவரும் இங்கு குழுமியுள்ளோம். இந்த 40 ஆவது ஜயந்தியை ஆடம்பரமற்ற முறையில் மிகவும் அர்த்த புஷ்டியுள்ளதும் பயனுறுதி யுள்ளதுமான பொது விழாவாகக் கொண்டாட உங்கள் நகரமுதல்வராலும் மாநகர சபையாலும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதையிட்டு நாங்கள் பெருமையடையக் கூடிய நிலையிலிருக்கின்றோம். உங்கள் நகரமுதல்வர் இந் நகரத்தின் நடவடிக்கைகளை மிகவும் பக்குவமாகக் கண்காணித்து வருகின்ற அறிவுமிக்கத் தலைவர் ஆவார். அவருடைய தந்தை முதலாவது நகரசபையில் நகர உறுப்பினராகத் திகழ்ந்தவர். தமது தந்தையின் முன்மாதிரியை உங்கள் முதல்வரும் பின்பற்றி வருகின்றார். நகர முதல்வர் சட்டத்தரணி சரச்சந்திர ராஜகருணா அவர்கள் நகர உறுப்பினர்களதும் இப்பகுதி மந்திரி குழாத்தினரதும் இப்பகுதியிலுள்ள பல்வேறு கழகங்களினதும் ஒத்துழைப்புடன் பொது மக்களுக்குப் பயன்விளைவிக்கும் வகையில் கருத்தாழம் மிக்க செயல்திட்டத்தின் வாயிலாக இந்த 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளார்.

எல்லா மதத் தலைவர்களினதும் ஏனைய முக்கியஸ்தர்களினதும் ஒத்துழைப்புடன் இப்பகுதி மக்கள் யாவரும் பங்குபற்றக்கூடியவாறு சிறந்ததோர் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கல்வித்துறை, பண்பாட்டுத்துறை, பொருளாதாரத்துறை, கமத்-தொழில்துறை ஆகியவற்றை அளாவும் வகையில் பாடசாலைகள் முதல் தொழிற்சங்கங்கள் வரை விரிந்து பரந்து

செல்லும் பங்குபற்றலுடன் இவ்வாண்டு பூர்த்தி விழாவினைக் கொண்டாட நீர்கொழும்பு மாநகரசபை ஏற்பாடு செய்துள்ளது. இது போற்றுதற்குரிய முன்மாதிரியாகும். பங்கு பற்றியோர்கள் புதிய அனுபவத்தினையும் புதிய அறிவினையும் பெறும் வண்ணம் விழாக்கள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். பங்குபற்றுபவர்கள் இன்புறும் வகையில் விழாக்கள் ஏற்பாடுசெய்யப்படல் வேண்டும். பங்குபற்றியோர் மனதில் சாந்தி இடம்பெறும் வகையில் விழாக்கள் சிறப்புப் பெறல் வேண்டும். அவ்விழாவில் பங்குபற்றிய பின்னர் மக்கள் மனதில் அமைதியும் ஒற்றுமையும் தோழமையும் பூரிப்பும் ஏற்படுதல் அவசியமாகும். விழா மண்டபத்தை விட்டகலும் போது மனித வாழ்விற்கு மிகுபயன் தரும்-மனிதனை மனிதனுக்கும் உணர்ச்சி மேலீட்டை ஏற்படுத்தத் துணைபுரியும் வண்ணம் விழாக்கள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். அப்பண்பான உணர்ச்சி மேலீடு இன்று எமக்கு ஏற்பட்டது. இங்கு வருகை தந்து இவ் விழாவில் கலந்துகொண்டபின்னர் நமது உள்ளங்கள் மிகவும் குளிர்ந்துள்ளன. பெரியதோர் உளப் பூரிப்பு ஏற்பட்டது. இன, மத, சாதி, கோத்திர வேறுபாடுகள் இல்லாத உணர்ச்சி ஏற்பட்டது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

ஒரு வைபவத்தில் கலந்தகொண்டு அவ்விடத்தை விட்டேகும் போது ஒருவர் உள்ளத்தில் பண்படிப்படையான மாற்றம் ஏற்படல் வேண்டும். மனத்துக்கு விருந்தான சீரிய கருத்துக்களை அவ்வைபத்தின் வாயிலாக அறியக்கூடிய வாய்ப்பு இருத்தல் வேண்டும். வீட்டுக்குச் சென்றபின்னர் தமது மனைவிமக்களோடு அவ்வைபவத்தின் போது தாம் பெற்ற உயர்ந்த அனுபவத்தைக் கூறத்தக்க சிறப்பு இருத்தல் வேண்டும். அவ்வைபவத்தில் பேசியவர்களது அரிய கருத்துக்கள் எனது உள்ளத்தில் குடிகொண்டிருந்த தீய எண்ணங்களைப் போக்க உதவின என்றும் நான் பண்பாளராகவும் சீராளராகவும் மாற்றமடைந்தேன் என்றும் எனது உள்ளம் பண்படைந்துவிட்டதென்றும் மனைவி மக்களுக்குக் கூறக் கூடிய சிறப்புடன் விழாக்கள் கொண்டாடப்படல் வேண்டும். அத்தகைய நல சுவாத்திய மான சூழலில் நான் இங்கு சிலமணிநேரம் கழித்து விட்டேன். பலவற்றைக் கற்றுக் கொண்டேன்.

இத்தகு வைபவங்களால் நல்ல நோக்கங்கள் பலவற்றை நிறைவேற்றிக் கொள்ளலாம். நம்மிலும் பார்க்க ஏலாநிலையில் உள்ளவர்களுக்குக் கை கொடுக்கவேண்டும். நம்மிலும் பார்க்கத் திறமைசாலிகளைப் போற்றவேண்டும். இன்பம் வரினும் துன்பம் வரினும் நாம் அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் வாழ வேண்டும் என்ற பண்பட்ட எண்ணம் உதயமாதல் வேண்டும். இதன் அடிப்படையில் தான் நாங்கள் இத்தகைய விழாக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். இங்கு பெருந்திரளான மக்கள் குழுமியிருக்கிறார்கள். உங்கள் நகர முதல்வரையும் மாநகர சபையினையும் இவ்வாறு ஊக்குவிக்கும் வகையில் இங்கு திரண்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதலை உரித்தாக்குகின்றேன்.

இந்த 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் நோக்கில் நீர்கொழும்பு மாநகர சபையால் இப்பகுதியில் வாழும் வறிய மக்களுக்கும் இளைஞர்களுக்கும் நலம் பலபயக்கும் வண்ணம் கருத்திட்டங்கள் பல கடந்த சில நாட்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச் சீரிய திட்டங்கள் பற்றி நாட்டிலுள்ள ஏனைய மக்களும் ஏனைய நிறுவகங்களும் அறிந்து கொள்வது அவசியமாகும். எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் கருத்தாழம்மிக்கதும் மிகுபயன் விளைவிப்பதுமான செயல்திட்டங்கள் யாவையென நாட்டிலுள்ள அனைவரும் அறியக் கூடியவாறு இத்திட்டங்களை வெகுசன ஊடகங்களின் வாயிலாக விளம்பரப்படுத்தல் வேண்டுமென்பதன் அவசியத்தை நான் நகர முதல்வருக்குக் கூறினேன். கடந்த 40 ஆண்டுகளில் சாதித்தவைகளைப் பெருமிதத்துடன் எடுத்துரைப்பதில் மாத்திரம் நீங்கள் அக்கறை செலுத்தவில்லை. இனி வரும் 40 ஆண்டுக் காலப்பகுதிக்கு முன்மாதிரியாக விளங்கக்கூடிய பல அரிய திட்டங்களை இந்த 40 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். நீர்கொழும்பு மாநகர சபையினை ஆரம்பித்து வைத்தவர்கள் பற்றியும் நாம் குடியேற்ற நாடாகவிருந்த காலத்தில் நீர்கொழும்பு மாநகர சபைக்குத் தொண்டாற்றியவர்கள் பற்றியும் பலர் பேசினார்கள். இன்று உயிருடன் இல்லாத அப்பெரியார்களின் புகழ் பல்லாண்டுகள் நீடிக்கும் வண்ணம் எதிர்க்காலத்துக்கான இச்சீரிய திட்டங்களை நீங்கள் அங்குராப்பணம் செய்துள்ளீர்கள்.

நீர்கொழும்பின் வரலாறு உங்களுக்குத்தெரியும். நீர்கொழும்பு கண்டுள்ள முன்னேற்றமும் உங்களுக்குத் தெரியும். நீர்கொழும்பின் அபிவிருத்திக்கு செய்யப்படவேண்டியன பற்றியும் உங்களுக்குத் தெரியும். அச் செயல்திட்டங்களில் நாங்கள் அனைவரும் ஈடுபாடு கொள்ளல் வேண்டும். இலங்கையிலுள்ள நகரங்கள் யாவும் நம் அனைவருக்கும் சொந்தமாகும். முன்னொரு பிறவியில் நாம் இவ்வெல்லாப்பகுதிகளிலும் பிறந்திருக்கலாம். மறுமையிலும் பிறக்கஇடமுண்டு. எனவே நாம் எங்கிருந்தாலும் அங்கு நமக்குச் சொந்தம் என்னும் கோட்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பிறிதொரு மாகாணத்தில் நாம் வாழ்ந்து வருவதெனினும் ஏனைய மாகாணங்கள் நமக்கு உணவு ஊட்டுவனவாக அமைந்துள்ளனவென்பதை நாம் அறிவோம். நாம் பிறந்து வாழும் மாகாணத்தில் விளையும் பொருள்களால் மட்டுமே நாம் உயிர்வாழ முடியாது. இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் விளையும் உணவுப் பொருள்கள், புடைவைவகைகள், ஏனைய பண்டங்கள் முதலியன நாம் எங்கு வாழ்ந்தாலும் இன்றியமையாதவை ஆகும். நம் நாட்டில் விளையும் பொருள்கள் மட்டுமன்றி உலகில் ஏனைய பகுதிகளில் விளையும் பொருள்களும் நமக்குத் தேவைப்படுகின்றன. எனவே நாம் பரந்த மனப்பான்மையோடு வாழல் வேண்டும். குறுகிய மனப்பான்மைக்கு இடந்தரக்கூடாது.

வரலாற்று சிறப்புமிக்க இத்தருணத்தில் இறைவனின் புதல்வன் உலகத்தாரை உய்விக்கக் காட்டிய முன்மாதிரியை நினைவூட்டவிரும்புகின்றேன். இன்னும் இரண்டு நாட்களில் நத்தார் பண்டிகையைக் கொண்டாடவிருக்கின்றோம். நத்தார் பண்டிகைக் காலத்தில் உலகமெங்kanும் இயேசு நாதர் அருளிய சமாதானம் குடிகொண்டிருக்கும். இயேசு பெருமானின் உள்ளம் நிரம்பி வழிந்த அன்பும் கருணையும் துன்பம் நிறைந்த உலக மக்களுக்கு சாந்தியைக் கொணரும் நல்ல நாளாக அப்பெருமான் உலகில் அவதரித்த நத்தார் பண்டிகையைக் கொண்டாடி வருகின்றோம். அப்பெருமான் உலகிற்கு வழங்கிய நற்செய்தியில் உலக மக்கள் அனைவரும் தோழமையுடன் வாழ வேண்டுமென்னும் சீரிய உபதேசம் அடங்கியுள்ளது. இவ்வுயர்ந்த எண்ணங்கள் இப்பண்டிகை நாட்களில் எமது உள்ளங்களைக் கனிய வைக்கின்றன.

இவ்வுலகில் நாங்கள் தனியாக வாழமுடியாது. நமது சகோதர மக்களது ஒத்துழைப்பு நமக்குப் பெரிதும் அவசியமாகிறது. நமது பிழைப்புக்கு அந்த ஒத்துழைப்பு இன்றியமையாதது. அந்த நற்செய்தியினை மன்பதைக்கு வழங்கிய இயேசு பெருமான் அவதரித்த இப் புனிதமான காலப்பகுதியில் இந்த 40 ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாட எண்ணியதையிட்டு நான் உங்களைப் பாராட்ட விரும்புகின்றேன்.

இன்றுள்ள உள்ளூராட்சி முறையானது நமது நாடு குடியேற்ற நாடாகவிருந்த காலத்தில்தான் அறிமுகப் படுத்தப்பட்டது. பிரித்தானியர்கள் நம்மை ஆண்டகாலத்தில் ''லோகல் போட்'' அல்லது ''அர்பன் டிஸ்டிக் கவுன்சில்'' என வழங்கப்பட்டு வந்தது. பின்னர் மாநகர சபை, நகர சபை, பட்டின சபை, கிராம சபை ஆகியன வழக்கத்துக்கு வந்தன. நமது சரித்திரத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகம் முக்கிய இடம் வகித்துள்ளது. பண்டைய அரசர்கள் ஆண்டு வந்த காலங்களிலும் கிராம சபைகள் வழக்கில் இருந்தன. கிராமமக்கள் உறுப்பினராகவிருந்த அச்சபைகள் கிராமங்களின் நிருவாகத்தை மேற்கொண்டிருந்தன. ஊர் நிலைமையினை அறிய வேண்டிய போது மன்னர் கிராம சபையைக் கேட்பது அன்று வழக்கமாய் இருந்தது. பண்டுகாபய மன்னன் அங்ஙனம் விசாரித்ததாக வரலாறு கூறுகின்றது.

ஆதலால் பிரித்தானியர்கள் நம்நாட்டில் உள்ளூராட்சி முறையினை அறிமுகப்படுத்தியபோது நமது மூதாதையர்களின் வழிவந்த நாங்கள் அந் நிருவாகத்தினைச் சிறப்பாக நடாத்தக் கூடியவர்களாக விளங்கினோம். பண்டைக்காலத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகத்தொகுதிகள் மிகவும் யதார்த்தபூர்வமான அடிப்படையில் அஃதாவது புவியியல் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமத்துக்கும் தனிச்சிறப்பிருந்தது. தனிப்பட்ட புவியியற் சூழல் இருந்தது. அதற்கே சிறப்பான பழக்க வழக்கங்கள் இருந்தன. அதற்கே சிறப்பான தொழில்களும் கைப்பணிகளும் இருந்தன. கிராம எல்லைகளை நிர்ணயிக்கும்போது இச் சிறப்பியல்புகள் கவனத்திற் கொள்ளப்பட்டன. நமது பண்டைய கிராமங்கள்யாவும் இதன் அடிப்படையில் அஃதாவது இயற்கைச் சூழல் தொகுதிகளின் அடிப்படையில் எல்லையிடப்பட்டவை. கிராமத்தில் வாழ்ந்த பல்வேறு

தொழில் புரிபவர்களும் ஒரே பூச்செண்டில் கோக்கப்பட்ட பல் வண்ணப்பூக்கள் போன்று கிராமத்துக்கு அழகினை ஊட்டினர். தாம் புரிந்த தொழில் காரணமாக பாகுபாடுகள் பாராட்டப்படவில்லை. அன்று பல்வகைமை நன் நோக்கத்துக்கே பயன்படுத்தப்பட்டது. இன்று அதனை பாகுபாடுகளைத் தீவிரமாக்கவே பயன்படுத்தி வருகிறார்கள். இன, மத, மொழி வேறுபாடுகளும் மாகாண மற்றும் சூழல் வேறுபாடுகளும் இன்று நம்மிடையில் சச்சரவுகளை ஏற்படுத்தி வருகின்றன. அன்று பல்லினமாதலை நல்லோவியமாகவே கருதிவந்தார்கள். ஒரே வண்ணப் பூக்களைக் கொண்ட பூத்துணர் ஆகாமல் பல் வண்ணப்பூக்களாலான நறுமணம் வீசும் மலர் மாலையாகவே அன்று கிராமங்கள் விளங்கி வந்தன. நம் நாட்டிலுள்ள 20,000 அல்லது 25,000 கிராமங்கள் அந்த அடிப்படையில் தான் தோன்றலாயின. ஒவ்வொரு கிராமத்துக்கும் சிறப்பானவோர் அமிசம் இருக்கத் தான்செய்யும். மேலீடாகச் சிறப்பமிசம் இல்லையெனத் தோன்றிடினும் அக் கிராமத்தின் மண்ணிலாவது ஒரு வேறுபாடு இருப்பது தெரியும். அவ்வூரில் வளரும் செடிகொடிகளில் வேறுபாடு இருக்கிறது. வாழும் மக்களது பழக்கவழக்க வேறுபாடுகள் உண்டு, மொழி வேறுபாடுகள் உண்டு, உண்ணும் உணவுகளில் வித்தியாசம் இருக்கிறது. ஆக்கப்படும் உணவுகளின் சுவை வேறுபடுகிறது. சமையல் செய்யும் முறைகளில் வித்தியாசம் இருக்கிறது. இவைகள் தான் அவ்வவ்வூர்களுக்குள்ள சிறப்புகள். இவற்றின் அடிப்படையில் தான் நமது பண்டைய கிராமங்களில் எல்லைகள் வரையப்பெற்றிருந்தன. ஒரு நிலவரைப்படத்தை எடுத்து அதன் மேல் கோடிட்டு கிராம எல்லைகளை நிர்ணயிக்கும் வழக்கம் அன்று இருக்கவில்லை.

நிலவரைபடங்களை வைத்துக் கொண்டு கிராம, வட்டாரங்களின் எல்லைகளைக் குறிக்கும் பழக்கம் பின் னொரு காலத்தில் அளவுக்கு விஞ்சியும் பரவத் தொடங்கியது. தங்களுக்கு சாதகமான முறையில் நகர வட்டாரங்களை எல்லையிடுவதற்கு நிலவரைப்படங்களைப் பயன்படுத்த முன்வந்தார்கள். அன்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அளவையாளர் ஒருவரை அழைத்துக் கொண்டு தமக்கு சாதகமாக வாக்கு அளிக்கக்கூடியவர்களை உள்ளடக்கும் வகையில் தேர்தல் வட்டாரங்களை எல்லைப்படுத்த முயன்று

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

வந்தனர். சில வட்டார எல்லைக் கோடுகள் வாக்காளர்களின் இல்லங்களை இரண்டாகப் பிரிக்கும்படியும் வரையப்பட்டிருந்தன. இது கேவலமான நிலையாகும். இம் மாநகர சபையில் 47 வட்டாரங்கள் இருக்கின்றன. அவற்றில் 40 ஆசனங்களும் அன்று ஆண்ட கட்சிக்குக் கிடைத்தன. அங்ஙனம் கிராம நகரங்களை எல்லைப்படுத்துவது முறையாகாது. நமது நகர கிராமங்கள் அவற்றுக்கேயுரிய தனிச்சிறப்புகள் காரணமாகவே இப்பொழுதுள்ள வடிவத்தைப் பெற்றுள்ளன.

நமது உள்ளூராட்சி முறையை நன்ருகப் பேணி வளர்க்க வேண்டிய காலகட்டம் இப்பொழுது உதயமாகியுள்ளது. இன்று தேசியப் பாராளுமன்ற முறை இருக்கிறது. உள்ளூர் ஆட்சி முறையும் இருக்கிறது. உள்ளூர் ஆட்சி முறையின் கீழ் மாநகர சபைகளும் பிரதேச சபைகளும் இயங்கிவருகின்றன. ஆனல் கிராமங்களும் பட்டினங்களும் நகரங்களும் அவற்றுக்கே சிறப்பான சூழல்களின் கீழ் அபிவிருத்தி செய்யவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இவ்வபிவிருத்தியானது அவ்வப்பகுதி மக்களின் அபிலாசைகளுக்கேற்ப இடம் பெறுதல் அவசியமாகும். அது ஒரு தேவைப்பாடாகும்.

இரண்டாவது தேவைப்பாடு யாது? இன்று இலங்கையில் மக்கட் தொகை 160 இலட்சமாகும். 90 இலட்சம் வாக்காளர்கள் இருக்கிருர்கள். ஆனல் நாட்டின் அரசியலில் — நிருவாகத்தில் ஈடுபாடுகொள்ளும் உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை மிகச்சிறிதாகும். சனதிபதி இருக்கிருர். பிரதம அமைச்சர் இருக்கிருர். அமைச்சரவையொன்றுண்டு. பாராளுமன்றம் ஒன்று உண்டு. உள்ளூராட்சிமன்றங்களும் நகர சபைகளும் மாநகர சபைகளும் பிரதேச சபைகளும் உள்ளன. இவற்றில் பதவிகளை வகிப்பவர்களின் எண்ணிக்கை யாது? ஐயாயிரமா? பத்தாயிரமா? அல்லது ஐம்பதாயிரமா? இல்லை அதற்குக் குறைவான எண்ணிக்கையினர் தான் இந் நிருவாக நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். 160 இலட்சம் மக்கட் தொகை கொண்டவொரு நாட்டிலே, 90 இலட்சம் வாக்காளர்களாக உள்ளவொரு நாட்டிலே ஆட்சி உரிமைகளில் நேரடித் தொடர்பு கொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு எனக்கேட்க விரும்புகின்றேன். இந்த

எண்ணிக்கை போதாது. விசேடமாக, படித்த இளைஞர்கள்-ஊக்கம் மிக்க இளைஞர்கள் பலர் வாழும் ஒரு நாட்டிலே அவர்களுக்கு நாட்டை ஆளும் அனுபவத்தை வழங்கக்கூடிய வழிவகைகள் யாவையென நாங்கள் உன்னிப்பாக எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

பலர் இளைஞர்களின் மனவிரக்தியினைப் பற்றிப் பலவாறு பேசி வருகின்றார்கள். அவ் விரக்திக்குப் பொருளாதார பிரச்சினைகள் ஏதுவாகவுள்ளன என்கிறார்கள். தொழில்வாய்ப்பின்மை என்கிறார்கள். இளைஞர்கள் கோருவது மேற்கூறியவற்றுக்கான தீர்வுகள் மட்டுமல்ல. இந் நாட்டின் வருங்கால நிருவாகப் பணியை மேற்கொள்ளவிருக்கும் இவ்விளம் தலைமுறையினருக்கு அவர்கள் வாழும் பகுதிகளிலே ஆட்சியுரிமைகளில் பங்குகொள்ளத்தக்கவாறு புரட்சிகரமான செயல்திட்டங்களையும் அமைப்பாண்மைகளையும் உருவாக்கல் வேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும். இவற்றைப்பற்றி நான் ஆரஅமர ஆலோசித்துள்ளேன்.

பாரத நாட்டுப் பிதா அண்ணல் காந்தி அவர்கள் பிரித்தானியர்களுக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த காலத்தில் அன்னார் சுயாட்சியை வென்றெடுப்பதில் மாத்திரம் ஈடுபாடுகொள்ளவில்லை. யதார்த்தபூர்வமான சுயாட்சிக்கும், அச்சுயாட்சி சீர்குலையாமல் இருப்பதற்கும் நாட்டிலுள்ள வர்களுள் பலர் அரசியல் பொறுப்புகளையும் நிருவாகப் பொறுப்புகளையும் வகிக்கக்கூடிய சூழலும் ஏற்படுத்தப்படல் வேண்டுமென்று காந்தி அடிகள் எண்ணினார்கள். சுயாட்சிக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தகாலத்திலேயே அதற்கான ஆய்வுகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டார். பல மேடைகளில் பேசி வந்தார். பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். பாரதத்தில் சனநாயக ஆட்சிமுறையொன்று நிலைபெறவேண்டுமெனின் பல மொழிகளைப் பேசும்மக்களையும் பல மதங்களைப் பின்பற்றும் மக்களையும் கொண்ட பாரத நாட்டின் புவியியல் சூழலினையும் ஆயிரக் கணக்கான பண்பாட்டு நெறிகளையும் நாங்கள் நன்கு

